


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 4 | 4 Pages | 4.8.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| லர்: 03 | இதழ்: 4 | 4 பக்கங்கள் | 4.8.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு**

**விளக்கம்:**
மயக்கம் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வை உடையவர்க்கு, அம் மெய்யுணர்வுஅறியாமையைநீக்கிஇன்ப நிலையைக்கொடுக்கும்.

## வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான வெகுமான தொகை உயர்வு: தேர்தல் கமிஷன்




புதுடெல்லி, ஆக. 4

இந்திய தேர்தல் கமிஷன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்தான் இந்திய ஜனநாயகத்தின் அடித்தளமாக அமைந்துள்ளது. வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் வாக்காளர் பதிவு அலுவலர் (இ.ஆர்.ஓ.), உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (ஏ.இ.ஆர்.ஓ.), வாக்குச்சாவடி அளவிலானஅலுவலர்(பி.எல்.ஓ.)மற்றும்பி.எல்.ஓ.கண்காணிப்பாளர்களைக் கொண்டு வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அலுவலர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புதான், பிழையற்ற மற்றும் வெளிப்படையான வாக்காளர் பட்டியலை தயாரிக்க முக்கிய காரணிகளாக உள்ளன.

பி.எல்.ஓ. அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு 2015ம் ஆண்டில்தான் ஆண்டு வெகுமான தொகை உயர்த்தப்பட்டு இருந்தது. தற்போது அவர்களுக்கான ஆண்டு வெகுமான தொகையை உயர்த்தி வழங்க தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளது. அதுபோல வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு வெகுமான தொகையை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, பி.எல்.ஓ. அலுவலர்கள் பெற்று வந்த வெகுமானம் ரூ.6 ஆயிரத்தில் இருந்து ரூ.12 ஆயிரமாகவும்; அவர்கள் பெற்று வந்த ஊக்கத் தொகை ஆயிரம் ரூபாயில் இருந்து ரூ.2 ஆயிரமாகவும் உயர்த்தப்படும். கண்காணிப்பாளர்கள் பெற்று வந்த வெகுமானத் தொகை ரூ.12 ஆயிரத்தில் இருந்து ரூ.18 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. இ.ஆர்.ஓ. மற்றும் ஏ.இ.ஆர்.ஓ.க்களுக்கு முறையே ரூ.30 ஆயிரம் மற்றும் ரூ.25 ஆயிரம் வெகுமானம் வழங்கப்படும்.

மேலும், பீகாரில் தொடங்கியுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த (எஸ்.ஐ.ஆர்.) பணிகளில் ஈடுபடும் பி.எல்.ஓ.க்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாகரூ.6ஆயிரத்தைவழங்கவும்தேர்தல்கமிஷன்முடிவுசெய்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பாலியல் வழக்கு: குறைந்த தண்டனை கோரி நீதிபதியிடம் கெஞ்சிய பிரஜ்வல் ரேவண்ணா




பெங்களூரு, ஆக. 4

முன்னாள் பிரதமர் தேவேகவுடா பேரனும், முன்னாள் மந்திரி ரேவண்ணாவின் மகனுமான முன்னாள் எம்.பி. பிரஜ்வல் ரேவண்ணா மீது பாலியல் புகார் எழுந்தது. மொத்தம் அவர் மீது 4 பாலியல் புகார்கள் தனித்தனியாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ஒருவழக்கில்அவருக்குசாகும்வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தண்டனை வழங்குவதற்கு முன்பு நீதிபதி சந்தோஷ் கஜனன பட், பிரஜ்வல் ரேவண்ணாவிடம் தனது கருத்தை கேட்டுள்ளார்.

அப்போது பிரஜ்வல் ரேவண்ணா கூறியதாவது:

நான் பி.இ. மெக்கானிக்கல் படித்துள்ளேன். நான் எப்போதும் தகுதி அடிப்படையில் தேர்ச்சி பெற்றேன். நான் பல்வேறு பெண்களை பலாத்காரம் செய்ததாக சொல்கிறார்கள். பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பெண்கள் யாரும் தாமாக முன்வந்து புகார் அளிக்கவில்லை. அவர்கள் தேர்தலுக்கு 6 நாட்களுக்கு முன்பு வந்து புகார் கூறினர். போலீசார் அந்த பெண்களை திட்டமிட்டு அழைத்து வந்து புகார் அளிக்க வைத்தனர்.

பாலியல் விவகாரம் குறித்து பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களின் கணவர்களிடமோ அல்லது உறவினர்களிடமோ கூறவில்லை. சில வீடியோக்கள் வெளியான பிறகு பாதிக்கப்பட்ட பெண் வந்து புகார் அளித்துள்ளார். கோர்ட்டு வழங்கும் தண்டனையை ஏற்பேன். எனக்கு குடும்பம் உள்ளது. கடந்த 6 மாதங்களாக எனது பெற்றோரை பார்க்கவில்லை. அதனால்எனக்குகுறைந்தபட்சதண்டனையைவழங்கவேண்டும்.அரசியலில் நான் வேகமாக வளர்ந்ததே நான் வாழ்க்கையில் செய்த தவறு.

இவ்வாறு அவர் கூறினார்.

## பீகார் சட்டசபை தேர்தல்: இந்தியா கூட்டணி 7ந்தேதி ஆலோசனை



ஜம்மு, ஆக. 4

பீகார் சட்டமன்றத் தேர்தல் அக்டோபர் நவம்பர் மாதங்களில் நடைபெற வாய்ப்புள்ளது. அங்கு மீண்டும் ஆட்சியை தக்க வைக்க ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி தீவிர முயற்சியில்ஈடுபட்டு உள்ளது.அதேநேரம்அங்குஆட்சியைகைப்பற்றராஷ்ட்ரீயஜனதாதளம் மற்றும்காங்கிரஸ்இணைந்தஇந்தியாகூட்டணியும்தீவிரமாககளத்தில் இறங்கி இருக்கிறது.

இந்த தேர்தல் குறித்து விவாதிப்பதற்காக வருகிற 7ந்தேதி இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டம் ஒன்று டெல்லியில் நடப்பதாக தேசிய மாநாடு தலைவர் பரூக் அப்துல்லா கூறியுள்ளார்.

ஜம்முவில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் இது குறித்து கூறுகையில், 'பீகார் தேர்தலிலும் வாக்கு திருட்டு மூலம் வெற்றி பெற பா.ஜனதா திட்டமிட்டு உள்ளதாக ராகுல் காந்தி கூறியுள்ளார். அவரை நான் சந்திக்க உள்ளேன்.

இந்தியா கூட்டணியின் அனைத்து தலைவர்களும் வருகிற 7ந்தேதி சந்திக்கிறார்கள். அப்போது அவரிடம் இது குறித்து கேட்டு உண்மையை தெரிந்து கொள்வேன்' என்றார்.

# உடலுறுப்பு தானத்தில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை ஆக. 4

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

உயிர் பிரிந்த பின் தமது உடற்பாகங்கள்தீக்கும் மண்ணுக்கும் இரையாகாமல், பிறரது வாழ்வுக்குத் துணையாவதே பெருவாழ்வு! அதனால்தான், துணை முதல்அமைச்சராக இருந்தபோது, எனது உடலுறுப்புகளைக் கொடையளித்தேன்; முதல்அமைச்சராகப் பொறுப்பேற்ற பின், உடலுறுப்புகளைக் கொடையளிப்போருக்கு அரசு மரியாதையுடன் விடை கொடுக்கப்படும் என்று அறிவித்தேன்.




2023 செப்டம்பர் 23ல் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது முதல், இதுவரையில் 479 பேர் (கடந்த ஆண்டு மட்டும் 268 பேர்) தங்களது உடலுறுப்புகளை ஈந்து, பல நூறு உயிர்களை வாழ வைத்திருக்கிறார்கள்! அவர்களுக்கு எனது வணக்கம்! உடலுறுப்பு தானத்தில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகி இருப்பது கூடுதல் சிறப்பு!

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## எடப்பாடி பழனிசாமி, நயினார் நாகேந்திரன் தலைமையில் ஆலோசனை கூட்டம்

திருநெல்வேலி ஆக. 4

திருநெல்வேலியில் உள்ள தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் இல்லத்தில் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நயினார் நாகேந்திரன் ஆகியோர் தலைமையில் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது.



இந்த ஆலோசனை கூட்டத்தில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், கடம்பூர் ராஜு விஜயபாஸ்கர், ஆர்.பி. உதயகுமார் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். மேலும் தமிழிசை சவுந்தரராஜன், பொன் ராதாகிருஷ்ணன், ராம சீனிவாசன் உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர். தேர்தல் யுக்திகள், பரப்புரை வியூகம் குறித்து இந்த ஆலோசனைகூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகதகவல் வெளியாகி உள்ளது.

## 'உள்ளம் தேடி இல்லம் நாடி' பிரசார சுற்றுப் பயணத்தை தொடங்கினார் பிரேமலதா

திருவள்ளூர், ஆக. 4

தேமுதிகவும் தனது கட்சியை வலுப்படுத்தும் நோக்கில் தமிழகம் முழுவதும் சுற்றுபயணம் மேற்கொள்ள உள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார். அதன்படி, திருவள்ளூர் மாவட்டத்தின் கும்மிடிப்பூண்டி தொகுதியிலிருந்து தனது சுற்றுப் பயணத்தை பிரேமலதா தொடங்கி உள்ளார்.

தொடர்ந்து ஆகஸ்ட் 4ல் ஆவடி, ஆகஸ்ட் 5ல் காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை, ஆகஸ்ட் 6ல் வேலூர், ஆகஸ்ட் 7ல் திருப்பத்தூர், ஆகஸ்ட் 8ல் ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி, ஆகஸ்ட் 9ல் தருமபுரி, ஆகஸ்ட் 11ல் சேலம்,



ஆகஸ்ட் 13ல் கள்ளக்குறிச்சி, ஆகஸ்ட் 14ல் நாமக்கல், ஆகஸ்ட் 16ல் கரூர், ஆகஸ்ட் 17ல் பெரம்பலூர், ஆகஸ்ட் 18ல் அரியலூர், ஆகஸ்ட் 19ல் மயிலாடுதுறை, ஆகஸ்ட் 20ல் கடலூர் மற்றும் ஆகஸ்ட் 22ல் விழுப்புரம் பகுதிகளில் பிரசார பயணத்தை மேற்கொள்கிறார்.

ஆகஸ்ட் 23 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் முதல்கட்ட சுற்றுப் பயணத்தை நிறைவு செய்கிறார். அதன்படி, தேமுதிக சார்பில் ''உள்ளம் தேடி இல்லம் நாடி' என்ற பெயரில் பிரசார சுற்றுப் பயணத்தை அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் தொடங்கினார். தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதாவுடன் விஜய பிரபாகரனும் பிரசாரப் பயணத்தில் பங்கேற்றுள்ளார்.

## சென்னை மெரினா கடற்கரையில் ரூ.7.31 கோடியில் மேம்பாட்டுப் பணிகள்: உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக. 4

சென்னை மெரினா கடற்கரையில் ரூ.7.31 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேம்பாட்டுப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பெருநகர சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் நீலக்கொடி சான்றிற்காக 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியலை பேணும் மேம்பாட்டுப் பணிகளை இன்று(3.8.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.



நீலக்கொடி கடற்கரைத் திட்டமானது நன்னீர் மற்றும் கடல் பகுதிகளில் நிலத்தின் தன்மையினை மேம்படுத்தும் சர்வதேச அளவிலான முயற்சியாகும். இத்திட்டம் டென்மார்க் நாட்டின் சுற்றுச்சூழல் கல்வி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. நீலக்கொடி கடற்கரை திட்டத்தின் கீழ் நீரின் தரம், சுற்றுச்சூழல் மேலாண்மை, சுற்றுச்சூழல் கல்வி, பாதுகாப்பு ஆகிய நான்கு அம்சங்களின் வாயிலாக உயர்ந்த தரங்கள் நிலை நாட்டப்படுகிறது.

நீலக்கொடி கடற்கரை சான்றிதழ் பெறுவதால், உலக அளவில் அதிக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்த்து சுற்றுலா மேம்பாட்டிற்கும், உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் வழிவகை ஏற்படுகிறது. உள்ளூரில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள சமூகங்களை ஆதரித்து கடற்கரை இடங்களை பாதுகாக்க ஊக்குவிக்கிறது. மேலும் நீலக்கொடி என்பது சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலாத் துறைகளை ஒருங்கிணைக்க உதவும் ஒரு மதிப்புமிக்க சுற்றுச்சூழல் சின்னமாக வளர்ந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம் கடற்கரை நீலக்கொடி கடற்கரைசான்றிதழ் பெற்ற தமிழ்நாட்டின் முதல் கடற்கரையாகத் திகழ்கின்றது. தமிழ்நாடு முதல்அமைச்சர் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதில் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டினை மேலும் அதிக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் சென்னை, கடலூர், ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய கடற்கரைகளை நீலக்கொடி சான்று பெற்ற கடற்கரைகளாக விரிவுபடுத்தும் நோக்கில் சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியலை பேணும் வகையிலான மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் நீலக்கொடி சான்றிற்காக 20 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச தரத்தில் 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீலக்கொடி கடற்கரை திட்டத்தின் கீழ் மெரினா கடற்கரையின் 20 ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் மூங்கிலால் ஆன 20 நிழற்குடைகள், 40 சாய்வு நாற்காலிகள், 12 அமரும் நாற்காலிகள், 4 கண்காணிப்புக் கோபுரங்கள், 24 குப்பைத் தொட்டிகள், முகப்பு வளைவு, தியான மையம், வாசிக்கும் அறை மற்றும் தன்படம் எடுக்கும் 2 இடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தென்னை மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் 12 எண்ணிக்கையிலான சக்கர நாற்காலிகள், 4 இடங்களில் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கானவிளையாட்டு உபகரணங்கள், தாய்மார்கள் பாலூட்டும் அறை, காட்சிப் பதிவு கண்காணிப்பு (CCTV) மற்றும் முதலுதவி அறை, இருப்பு அறை, ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியே குளியல் அறைகள், கழிப்பறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை, தானியங்கி இயந்திரம் மூலம் தூய்மையான குடிநீர் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தூத்துக்குடியில் உலக தாய்ப்பால் வார விழா: அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்தார்

தூத்துக்குடி ஆக. 4

ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் வாரம் உலக தாய்ப்பால் வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இதன்படி தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் செவிலியர் கல்லூரி வளாகத்தில் உலக தாய்ப்பால் வார விழாவை சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் நேற்று தொடங்கி வைத்து தாய்ப்பாலின்முக்கியத்துவத்தை அனைவருக்கும் தெரிவிக்கும் வகையில் தாய்ப்பால் விழிப்புணர்வு பாடலை



வெளியிட்டார். மேலும் அவர் இந்த விழிப்புணர்வு பாடல் காட்சிப்படுத்தப்பட்ட வாகனத்தையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில் சமூக நலத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீ முரளீதரன் விழா பேருரை நிகழ்த்தினார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் இயக்குனர் மெர்சி ரம்யா விழாவின் சிறப்பு குறித்து பேசினார். இந்த விழாவில் சமூக நலத்துறை ஆணையர் சங்கீதா, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் சிவக்குமார், துணை முதல்வர் கலைவாணி, உறைவிட மருத்துவ அலுவலர் சைலஸ் ஜெயமணி, உதவி உறைவிட மருத்துவர் பெபின் கார்ட்டெக்ஸ், குழந்தைகள் நலப்பிரிவு இணைப் பேராசிரியர் கவிதா, தூத்துக்குடி மாநகராட்சி கமிஷனர் பானோத் ம்ருகேந்தர் லால், கோட்டாட்சியர் பிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இந்திய அஞ்சலக வங்கியில் வியாபாரிகள் யு.பி.ஐ. மூலம் பணம் பெறும் வசதி அறிமுகம்

சென்னை, ஆக. 4

அஞ்சல் துறையின் கீழ் செயல்படும் இந்திய அஞ்சலக பேமெண்ட்ஸ் வங்கியில் 2018ம் ஆண்டு முதல் இன்று வரை 12 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் சேமிப்பு கணக்குகளை தொடங்கியுள்ளனர். அரசு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவி தொகை கணக்குகள் மற்றும் அனைத்து விதமான அரசு மானியம், உதவி தொகை பெறும் கணக்குகளும் இதில் அடங்கும்.

இந்த வாடிக்கையாளர்கள் 'கூகுள் ப்ளே ஸ்டோரில்' செல்போன் வங்கி சேவைக்கான பிரத்யேக செயலி (ஆப்) மூலம் அஞ்சலக வங்கி கணக்குதாரர்கள் வாரிசு நியமனம், மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.




இந்த செயலி, தபால்காரரின் உதவியுடன் வாடிக்கையாளர்கள் தங்களது அஞ்சலக வங்கிக் கணக்குகளில் ஆதார் எண்ணை இணைப்பதன் மூலம் அரசின் மானியத் தொகைகளை எளிதாகப் பெற முடியும். மேலும் வியாபார கணக்கு மூலம் வியாபாரிகள் தங்கள் கடைகளில் 'யு.பி.ஐ. ஸ்டிக்கர்' அட்டை மூலம் பணம் பெறும் வசதியும் இலவசமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# விசாரணைக்கு சென்ற பெண்ணை உல்லாசத்துக்கு அழைத்த சப்இன்ஸ்பெக்டர்: திருச்சியில் பரபரப்பு



திருச்சி, ஆக. 4

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு போலீஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு வருமாறு பெண் ஒருவரை சப் இன்ஸ்பெக்டர் அழைத்துள்ளார். இந்த நிலையில் அவர் தன்னை உல்லாசத்துக்கு வருமாறு அழைத்ததாக கூறி, அந்த பெண் சமூகவலைத்தளத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில், போலீஸ் நிலையத்துக்கு சென்ற என்னிடம் புகார் சம்பந்தமாக சப்இன்ஸ்பெக்டர் விசாரித்தார். பின்னர் என்னிடம், `நீ உனது கணவரை காதல் திருமணம் செய்து 3 குழந்தைகள் பெற்றுள்ளாய். நீ உயர்ந்த சாதி தானே, தாழ்ந்த சாதியை சேர்ந்தவனை திருமணம் செய்து பிள்ளையை பெற்றிருக்க, உனக்கு எதுவாக இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ எனது ஆசைக்கிணங்க வேண்டும். இல்லையென்றால் உன் மனுவை விசாரிக்காமல் நான் காலதாமதமாக அலைக்கழிப்பேன்' என்று கூறினார்.

இதையடுத்து நான் அழுதுகொண்டே வீட்டுக்கு வந்துநடந்தவற்றை வெளி மாநிலத்தில் லாரி ஓட்டி வரும் கணவரிடம் செல்போன் மூலம் தெரிவித்தேன் என்று கூறி உள்ளார்.

சப்இன்ஸ்பெக்டரை குற்றம்சாட்டி சுமார் 2 நிமிடம் பேசி அந்த பெண் வெளியிட்ட வீடியோ சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருவது திருச்சி மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# "காதலனுடன் தான் செல்வேன்"... பரங்கிமலை ரெயில் நிலையத்தில் காதல் ஜோடியை தாக்கிய பெற்றோர்



சென்னை, ஆக. 4

சென்னையை அடுத்த ஆதம்பாக்கத்தை சேர்ந்த 19 வயது கல்லூரி மாணவி ஒருவர், சென்னையில் உள்ள துணிக்கடையில் பகுதி நேரமாக வேலை பார்த்து வருகிறார். நேற்று முன்தினம் இரவு வேலை முடிந்து ரெயிலில் பரங்கிமலை ரெயில் நிலையம் வரும் மகளை அழைத்து செல்ல அவரது தந்தை வந்திருந்தார். ரெயிலில் இருந்து இறங்கிய மாணவி, அவருடன் 25 வயதான வாலிபர் ஒருவரையும் அழைத்து வந்தார்.


பின்னர் ரெயில் நிலையம் அருகே நின்றிருந்த தனதுதந்தையிடம்சென்று அந்த வாலிபருக்கு, பணம் தரும்படிகூறினார்.அதற்கு தந்தை, "அந்த வாலிபர் யார்?. எதற்காக நான் பணம் தரவேண்டும்" என கேட்டார். அதற்கு மாணவி, "அது எனது காதலன். நீங்கள் பணம் தந்தால் நாங்கள் இருவரும் வெளியூருக்கு சென்று பிழைத்துக்கொள்வோம்" என்றார்.

அதை கேட்டு அதிர்ச்சி அடைந்த மாணவியின் தந்தை, தனது நண்பர்கள் உறவினர்களுக்கு தகவல் கொடுத்து வரவழைத்தார். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த அவர்கள், காதல் ஜோடியை விரட்டிப்பிடித்து சரமாரியாக அடித்து உதைத்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதுபற்றி தகவல் அறிந்து வந்த ஆதம்பாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பலவேசம் மற்றும் போலீசார், காதல் ஜோடியை மீட்டனர்.

விசாரணையில் கல்லூரி மாணவி வேலை செய்யும் துணிக்கடைக்கு சென்றபோது அந்த வாலிபருடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டு, பின்னர் காதலாக மாறியுள்ளது. மேலும் அந்த வாலிபர் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதும் போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. ஆனால் கல்லூரி மாணவி, தனது பெற்றோருடன் செல்ல மாட்டேன். காதலனுடன் தான் செல்வேன் என கூறினார்.

ஆனால் திருமணம் ஆகாததால் கல்லூரி மாணவியை பெண்கள் பாதுகாப்பு அதிகாரிகள் முன் ஆஜர்படுத்தி மகளிர் காப்பகத்தில் ஒப்படைத்தனர். வாலிபருக்கு பெற்றோர் யாரும் இல்லாததால் உறவினர்களை அழைத்து வந்து பெண்கள் பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறையிட்டு அந்த பெண்ணை திருமணம் செய்வது பற்றி பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுரை கூறி எழுதி வாங்கி அனுப்பி வைத்தனர்.

# நாமக்கல்: கார் பழுது நீக்கும் நிலைய தீ விபத்தில் 7 கார்கள், 2 பைக்குகள் சேதம்



நாமக்கல் ஆக. 4

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே உள்ள ஆண்டகளூர்கேட் பகுதியில் கோபால் என்பவருக்குச் சொந்தமான கார் பழுது நீக்கும் நிலையம் உள்ளது. அந்த பழுது நீக்கும் நிலையத்தில் இன்று அதிகாலையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.


இதுகுறித்து தகவல் அறிந்த கோபால் தனது கடைக்குச் சென்று பார்த்தார். அங்கு தீ மளமளவென எரிந்து கொண்டிருந்தது. உடனே அவர் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்தார். அதைத் தொடர்ந்து அங்கு வந்த தீயணைப்புத் துறையினர் தீயணைப்பு வாகனத்திலுள்ள தண்ணீரை பீறிட்டு அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்னர் கடைக்குள் சென்று பார்த்தபோது தீ விபத்தில் அங்கிருந்த பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள 7 கார்கள் மற்றும் 2 பைக்குகள் எரிந்து சேதமடைந்து இருந்தது.

இந்த தீ விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிந்து தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஒகேனக்கல் அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி

தர்மபுரி, ஆக. 4

தென்மேற்கு பருவமழை காரணமாக கேரள மாநிலம் வயநாடு மற்றும் கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இந்த 2 அணைகளும் முழுமையாக நிரம்பியதால், அணைகளின் பாதுகாப்பு கருதி உபரிநீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.



குறிப்பாக, கர்நாடக மாநில அணைகளில் இருந்து ஒகேனக்கல் காவிரி ஆற்றில் ஒரு லட்சம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் ஒகேனக்கல் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி அருவிகளில் குளிக்கவும், பரிசல் சவாரி செய்யவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது.

இந்த நிலையில், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 16,000 கன அடியாக சரிந்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகளுக்கும், பரிசல் இயக்கவும் நேற்று அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து, 7 நாட்களுக்கு பிறகு தற்போது நீர்வீழ்ச்சிகளில் குளிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# உடுமலை வனச்சரக அலுவலகத்தில் விசாரணை கைதி தற்கொலை: 2 பேர் பணியிடை நீக்கம்

திருப்பூர், ஆக. 4


திருப்பூர் மாவட்டம் உடுமலை வனச்சரக அலுவலகத்தில் விசாரணை கைதி தற்கொலை செய்து கொண்ட விவகாரத்தில் வனவர் நிமல், வனக்காவலர் செந்தில்குமாரை பணியிடை நீக்கம் செய்து திருப்பூர் மாவட்ட வன அலுவலர் உத்தரவிட்டுள்ளார். சிறுத்தைப் பல் வைத்திருந்ததாகக்கூறி விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட மாரிமுத்து கழிவறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வழக்கின் முழுவிரவம்:

தமிழககேரள எல்லையில், உடுமலைமூணாறு மலைப்பாதையில் சின்னார் சோதனைச்சாவடியில் கேரள கலால்துறை அதிகாரிகள் கடந்த மாதம் 30ந்தேதி வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது திருப்பூர் மாவட்டம் உடுமலையில் இருந்து கேரள மாநில அரசுபஸ்மூணாறு நோக்கி சென்று கொண்டிருந்தது. சோதனை சாவடியில் அந்த பஸ்சை கலால்துறை அதிகாரிகள் நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது அந்த பஸ்சில் பயணம் செய்த திருப்பூர் மாவட்டம் உடுமலை தாலுகா தளி அருகே திருமூர்த்தி நகர் மேல்குருமலை பகுதி பழங்குடியினத்தை சேர்ந்த தொழிலாளி மாரிமுத்து (வயது 45) என்பவரிடம் சிறுத்தை பல் ஒன்று இருந்ததும், தற்போது மாரிமுத்து, கேரள மாநிலம் மறையூர் பெரியகுடி பகுதியில் வசித்து வந்ததும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து மாரிமுத்துவை அதிகாரிகள் தமிழக வனத்துறையிடம் ஒப்படைத்தனர். உடுமலை வனச் சரக அலுவலகத்துக்கு மாரிமுத்துவை அழைத்துச் சென்று அவரிடம் வனத்துறையினர் விசாரணை நடத்தினார்கள்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 4.15 மணி அளவில் மாரிமுத்து வனத்துறை அலுவலக வளாகத்தில் உள்ள கழிப்பறைக்கு இயற்கை உபாதை கழிக்க சென்றபோது, அங்குள்ள கொக்கியில் தனது கைலியால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து உடுமலை போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதற்கிடையே மாரிமுத்து சாவில் மர்மம் உள்ளது என்றும், அவரை அடித்து கொலை செய்து தூக்கில் தொங்க விட்டனர் என்றும் அவரது உறவினர்கள் குற்றம் சாட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வருவாய்த்துறையினர், போலீசார் நடத்திய பேச்சு வார்த்தைக்கு பிறகு அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே வனத்துறை அலுவலகத்தில் மாரிமுத்து தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட அறையில், உடுமலை 1வது ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு நித்யகலா நேரில் ஆய்வு செய்தார். இது தொடர்பாக வனத்துறையினரிடமும் விசாரணை நடத்தினார்.



மேலும் நேற்று காலை திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாஜிஸ்திரேட்டு நித்யகலா விசாரணைக்கு வந்தார். பிரேத பரிசோதனை அறிக்கையில் இருந்த மாரிமுத்துவின் உடலை அவருடைய மனைவி பாண்டீஸ்வரி மற்றும் குடும்பத்தினரிடம் காண்பிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. அதன்பிறகு மாஜிஸ்திரேட்டு முன்னிலையில் பிரேத பரிசோதனை நடைபெற்றது. அவை வீடியோவில் பதிவு செய்யப்பட்டது.

பிரேத பரிசோதனை முடிந்து பிணவறையில் இருந்து மாரிமுத்துவின் உடலை ஆம்புலன்சில் ஏற்றினார்கள். அப்போது மாரிமுத்துவின் உறவினர்கள், குடும்பத்தினர், கட்சியினர் அனைவரும் உடலை வாங்க மறுத்து, பிணவறை முன் அமர்ந்து திடீர்தர்ணாவில் ஈடுபட்டனர். மாரிமுத்துவின்பிரேத பரிசோதனை அறிக்கையை உடனே வழங்க வேண்டும். எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வேண்டும். இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் உடுமலை ஆர்.டி.ஓ.குமார், மாவட்ட கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ராஜேந்திரன், துணை போலீஸ் சூப்பிரண்டு நமச்சிவாயம், திருப்பூர் தெற்கு உதவி கமிஷனர் ஜான் ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்தினர்கள். அதன்பிறகு பிரேத பரிசோதனை அறிக்கையை அதிகாரிகள் வழங்கினார்கள். இருப்பினும் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி உடலை வாங்க மறுத்தனர். அவர்களது கோரிக்கையை போலீசார் ஏற்றுக்கொண்டனர். இதைத்தொடர்ந்து மாரிமுத்துவின் உடலை இரவு 7.45 மணி அளவில் உறவினர்கள் வாங்கி சென்று அடக்கம் செய்தனர்.

# கள்ளக்குறிச்சி: மழையில் சுவர் இடிந்து விழுந்து மூதாட்டி பலி

கள்ளக்குறிச்சி ஆக. 4

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சுற்று வட்டார பகுதிகளில் நேற்று இரவு கனமழை பெய்தது.

இந்த நிலையில் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ஆதனூர் பகுதியில் கேசம்மாள்(98) என்ற மூதாட்டி வசித்து வந்த வீட்டில் உள்ள மண் சுவர் கனமழையின் காரணமாக இடிந்து விழுந்துள்ளது. அப்போது இரவு வீட்டில்



தூங்கிக் கொண்டிருந்த கேசம்மாள் சுவர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மூதாட்டியின் வீட்டின் அருகே வசிக்கும் நபர்கள் கொடுத்த தகவலின்பேரில், போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மூதாட்டியின் உடலை மீட்டு அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்ததோடு, வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சேலம்: 6 சவரன் தங்க நகைக்காக மூதாட்டி கொடூர கொலை தொழிலாளி கைது



சேலம் ஆக. 4

சேலம் மாவட்டம், சங்ககிரி அருகே வைகுந்தம் வெள்ளையம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் சித்தன். இவருடையமனைவி சின்னபொண்ணு (வயது 70). இவருக்கு மதியழகன்(55), ஆறுமுகம்(52), கோவிந்தன் ஆகிய 3 மகன்களும், சாந்தி என்ற மகளும் உள்ளனர்.

இவர்களில் கோவிந்தன் இறந்து விட்டதால் மற்ற அனைவருக்கும் திருமணம் ஆகி தனித்தனியாக வசித்து வருகின்றனர். ஏற்கெனவே சின்னபொண்ணுவின் கணவர் சித்தனும் இறந்துவிட்டார். இதனால் மூதாட்டி மட்டும் தனியாக வசித்து வந்தார்.

வைகுந்தம் மற்றும் சுற்று வட்டார சந்தைகளுக்கு செல்லும் அவர் காய்கறிகளை விலைக்கு வாங்கி அதனைவிற்பனை செய்து வந்துள்ளார். இந்த நிலையில், கடந்த 23ம் தேதி மாடு வாங்க வேண்டும் என்று அதே பகுதியை சேர்ந்த ஏழுமலை என்பவரிடம் சின்னபொண்ணு தெரிவித்துள்ளார். இதற்காக அவர் மூதாட்டியை கொங்கணாபுரம் சந்தைக்கு தனது மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்றதாக கூறப்படுகிறது.

அதன் பிறகு ஏழுமலை மட்டும் ஊருக்கு திரும்பி வந்துள்ளார். ஆனால் மூதாட்டி வரவில்லை. இதனால் அவருடைய மகன் மதியழகன் தனது தாயை பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இதுகுறித்து சங்ககிரி போலீசில் அவர் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் முதற்கட்டமாக மூதாட்டியை காணவில்லை என்று வழக்குப்பதிவு செய்து அவரை தேடி வந்தனர்.

அதேநேரத்தில் மூதாட்டியைசந்தைக்குஅழைத்து சென்ற ஏழுமலை மீது போலீசாருக்கு சந்தேகம் எழுந்தது. இதனால் அவரை பிடித்து கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தியபோது, மூதாட்டி சின்னபொண்ணுவை 6 சவரன் நகைக்காக கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

அதாவது, சம்பவத்தன்று மோட்டார் சைக்கிளில் சந்தைக்கு கறவை மாடு வாங்குவதற்காக மூதாட்டியை ஏழுமலை அழைத்து சென்றுள்ளார். அப்போது அவரது கழுத்தில் அணிந்திருந்த 6 சவரன் நகையை பார்த்தவுடன் அவருக்கு ஆசை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மூதாட்டியை மாடு வாங்க அழைத்து செல்லாமல் அந்த பகுதியில் மறைவான இடத்திற்கு அழைத்துசென்றுகொலை செய்துள்ளார். பின்னர் யாருக்கும் தெரியாமல் இருப்பதற்காக மூதாட்டியின்உடலை ஒரு சாக்கு மூட்டையில் கட்டி அதனை தாரமங்கலம் அருகே பவளத்தான் ஏரியில் வீசிவிட்டு அதே மோட்டார் சைக்கிளில் ஊருக்கு திரும்பி வந்திருப்பது போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து ஏழுமலை கொடுத்த தகவலின் பேரில்பவளத்தான்ஏரிக்கு சென்ற சங்ககிரி போலீசார், அங்கு கிடந்த சாக்கு மூட்டையை பிரித்து பார்த்தனர். அப்போது அதற்குள் மூதாட்டி சின்னபொண்ணு உடல் இருந்ததை அறிந்து அதனை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்துசங்ககிரிபோலீசார் இந்த வழக்கை கொலை வழக்காக மாற்றி தொழிலாளி ஏழுமலையை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவில்பட்டியில் ரெயில் முன் பாய்ந்து தொழிலாளி தற்கொலை

தூத்துக்குடி ஆக.4

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, இந்திராநகர் 3வது தெருவைச் சேர்ந்த பிச்சையா மகன் மாடசாமி (வயது 54), தள்ளுவண்டியில் துணிகளுக்கு இஸ்திரி செய்யும் தொழில் செய்து வந்தார். கடந்த ஒரு ஆண்டு காலம் சற்று மன நிலை பாதிக்கப்பட்டதில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர், மன அழுத்தத்தில் சாகப் போகிறேன் என்று அடிக்கடி சொல்லி வந்துள்ளார்.

இந்த நிலையில் இன்று காலை கடம்பூர் கோவில்பட்டி ரெயில் நிலையம் இடையே திருநெல்வேலி ஈரோடு பயணிகள் ரெயில் முன் நின்று தற்கொலை செய்து கொண்டார். இது



குறித்து தகவல் அறிந்த தூத்துக்குடி ரெயில்வே நிலைய சப்இன்ஸ்பெக்டர் பெருமாள் சம்பவ இடத்திற்கு சென்று அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். மேலும் இது குறித்து அவரது மனைவி லதா கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# தேனி: நிகழ்ச்சி மேடையில் திமுக எம்.பி. எம்.எல்.ஏ. வாக்குவாதம்

தேனி, ஆக. 4

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த மருத்துவ முகாம் திட்டத்தினை சென்னையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். அதன்பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் இந்த மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதன்படி, தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள சக்கம்பட்டியில் உள்ள அரசு பள்ளியில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஆண்டிபட்டி எம்.எல்.ஏ. மகாராஜன், திமுக எம்.பி. தங்க தமிழ்ச்செல்வன் மற்றும் அம்மாவட்ட கலெக்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முன்னதாக நிகழ்ச்சி மேடைக்கு வந்த திமுக எம்.பி. தங்க தமிழ்ச்செல்வன் வரவேற்பு பேனரில் ஆண்டிபட்டி எம்.எல்.ஏ. மகாராஜன் படம் மட்டும் இடம்பெற்றிருக்கிறது. நடைமுறைபடி நாடாளு மன்ற உறுப்பினர் படம் இருக்க வேண்டும் என கூறி கலெக்டரிடம் அவர் கோபம் அடைந்தார்.

பின்பு நிகழ்ச்சி மேடையில் நலத்திட்ட உதவி வழங்கும்போது, நலத்திட்ட அட்டையை தங்க தமிழ்ச்செல்வன் கையில் இருந்து பிடுங்கி நான் தான் வழங்குவேன் என எம்.எல்.ஏ. மகாராஜன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஒருகட்டத்தில் மக்கள் முன்னிலையில் இருவரும் கனத்த குரலை எழுப்பி கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து கலெக்டர், காவல்துறையினர் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் அனைவரும் தங்க தமிழ்ச்செல்வன், எம்.எல்.ஏ. மகாராஜனை சமாதானம் செய்தனர். இதனால் நிகழ்ச்சி விரைவிலே முடிக்கப்பட்டது.

அரசு நலத்திட்ட உதவி நிகழ்ச்சி மேடையில் தேனி ஆட்சியர் முன்னிலையில் திமுக எம்.பி. எம்.எல்.ஏ. வாக்குவாதத்தில் ஈடுபட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


# தூத்துக்குடி சகோதரர்கள் கொலையில் 5 பேர் கைது பரபரப்பு வாக்குமூலம்

தூத்துக்குடி, ஆக. 4

தூத்துக்குடி தெர்மல் நகர் அருகே உள்ள பண்டுகரையில் கடந்த 27 ஆம் தேதி நள்ளிரவு சின்னதுரையின் என்பவரின் வீட்டு அருகே அதே பகுதியை சேர்ந்த இளைஞர்கள் கஞ்சா புகைத்துக் கொண்டு இருந்ததாக கூறப்படுகிறது.

மேலும் போதையில் சின்னதுரையின் வீட்டு கதவை அந்த கும்பல் தட்டியதால், அவரது மகன்களான மாரி பாண்டியன் மற்றும் பார்வை மாற்றுத் திறன்கொண்ட அருள்ராஜ் கண்டித்துள்ளனர்.

இதனையடுத்து இவர்கள் 2 பேரும் சமீபத்தில் மாயமாகி இருந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் வ.உ.சி. துறைமுக சாலையில் தனியார் அனல் மின் நிலையத்தின் பின்புறம் உப்பாற்று ஓடை பண்டுகரையில் அவர்கள் 2 பேரும் கொன்று புதைக்கப்பட்டிருந்தனர்.




தகவல் அறிந்து போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். தொடர்ந்து 2 பேர் உடலையும் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து 2 பேரையும் கொன்ற கும்பல் யார்? எதற்காக கொலை செய்தார்கள்? என்பது குறித்து விசாரணை நடத்தி வந்த நிலையில், 5 பேரை கைது செய்தனர். அவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதாவது, மாரிபாண்டியனின் உறவினரான கோவில்பிள்ளை நகரை சேர்ந்த ரிதன்(25) என்பவரின் சகோதரர் சமீபத்தில் தற்கொலை செய்து கொண்டார். அதற்கு மாரி பாண்டி மற்றும் அருள் ராஜ் ஆகியோர் தான் காரணம் என்று ரிதன் கருதியுள்ளார்.

இதையடுத்து கடந்த 28ந்தேதி ரிதன் மற்றும் அவரது கூட்டாளிகளான முனீஸ்வரன், முகமது மீரான், சங்கர் மற்றும் ஒரு இளஞ்சிறார் உள்ளிட்டோர் சேர்ந்து மாரி பாண்டி மற்றும் அவரது சகோதரர் அருள்ராஜ் ஆகிய இருவரையும் கம்பு, கல்லால் தாக்கி உப்பாற்று ஓடைக்கு தூக்கி சென்றுள்ளனர். அங்கு வைத்து 2 பேரையும் சரமாரி தாக்கியதில் அவர்கள் இறந்தனர். தொடர்ந்து அவர்கள் உடலை அங்கேயே அந்த கும்பல் குழிதோண்டி புதைத்தது விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து அவர்கள் கூறிய தகவல்களை வாக்குமூலமாக பதிவு செய்தனர். மேலும், இந்த சம்பவத்தில் கூடுதலாக வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா? என்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

# த.வெ.க. நிகழ்ச்சிகளில் என் புகைப்படத்தை பயன்படுத்தக் கூடாது பொதுச்செயலாளர் ஆனந்த் அதிரடி உத்தரவு



சென்னை ஆக. 4

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் நடிகர் விஜய் கட்சியை தொடங்கி தனது அரசியல் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறார்.

இதனிடையே தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு மதுரையில் வருகிற 25ந்தேதி நடைபெற உள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பணிகளை விஜய்யின் உத்தரவின் பேரில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் தீவிரமாக செய்து வருகிறார். இதனிடையே த.வெ.க. நிகழ்ச்சிகளிலும், பேனர்களிலும் கட்சி தலைவர் விஜய், பொதுச்செயலாளர் என்.ஆனந்த் ஆகியோரின் புகைப்படங்களை த.வெ.க.வினர் பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில் த.வெ.க. நிகழ்ச்சிகளில் தலைவர் விஜய் படத்தை தவிர வேறு யாருடைய படத்தையும் பயன்படுத்தக் கூடாது என்று பொதுச்செயலாளர் என்.ஆனந்த் கட்சியினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக கட்சியினருக்கு அவர் அனுப்பி உள்ள கடிதத்தில், "நமக்கு ஒரே தலைவர் த.வெ.க. தலைவர் விஜய்தான். வருகிற 2026 தேர்தலில் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து தலைவர் விஜய்யை முதல்அமைச்சர் அரியாசனத்தில் அமர வைப்பதே நமது குறிக்கோள். இதற்காக நம் ஒரே தலைவரான விஜய்யுடன் கைகோர்த்து தீவிரமாக களப்பணியாற்ற உறுதி ஏற்போம்.

த.வெ.க. நிகழ்ச்சிகளிலோ, விளம்பர பேனர்களிலோ, எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் கட்சி தலைவர் விஜய் புகைப்படம் மட்டுமே பயன்படுத்த வேண்டும். என்னுடைய படத்தை யாரும் பயன்படுத்தக் கூடாது.

இதை ஏற்கனவே நான் நிர்வாகிகளிடம் வலியுறுத்தி இருக்கிறேன். மீண்டும் தற்போது நிர்வாகிகள், தொண்டர்களுக்கு இந்த கடிதத்தின் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மீறி பயன்படுத்தினால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மீண்டும் நான் சொல்லிக்கொள்வது மக்கள் விரும்பும் முதல்அமைச்சர் வேட்பாளர் விஜய் என்பதை மக்களிடம் கொண்டு சென்று வெற்றி பெறுவோம் என்பதுதான்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகளை செல்போனில் தொடர்பு கொண்டு த.வெ.க. தலைவர் விஜய் படத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

# தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே அறியாத எடப்பாடி பழனிசாமி: தா.மோ.அன்பரசன் பேச்சு

சென்னை, ஆக. 4

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கோவில் பட்டியில் 1.08.2025 அன்று தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், கடலை மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் லைட்டரை தடை செய்ய அ.தி.மு.க. முயற்சி எடுக்கும் எனவும், கடலை மிட்டாய் உற்பத்திக்கு தேவையான உதவிகளை செய்யும் எனவும், தெரிவித்துள்ளார்.

10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தீர்க்கப்படாத இந்த பிரச்சினை குறித்து, கழக அரசு பொறுப்பேற்றப் பின் தமிழக முதல்அமைச்சர் தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று லைட்டர்கள் இறக்குமதிக்கு தடை விதிக்குமாறு 08.09.2022 அன்று, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதினார், தமிழக அரசின் தொடர் அழுத்தத்தின் காரணமாக மத்திய அரசு 29.06.2023 அன்று ரூ.20க்கும் குறைவான (Pocket Lighters Gas Fuel & Nonrefillable) ஆகியவற்றிற்கு இறக்குமதி செய்ய தடை விதித்தது. இருப்பினும், மற்ற நாடுகளில் இருந்து லைட்டர்கள், உதிரிபாகங்களாக, இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்டு, லைட்டர்களாக பொருத்தப்பட்டு மீண்டும் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இதனால் தீப்பெட்டி தொழிலின் உள்நாட்டு வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதுகுறித்து மீண்டும் மத்திய அமைச்சர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் 13.10.2024 அன்று பாக்கெட் லைட்டர்களின் பாகங்கள், (gas fuelled, non refillable or refillable lighters) சிகரெட் லைட்டர்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதித்து அறிவித்துள்ளது.

ரஷியா, உக்ரைன் போர், அமெரிக்கா பொருளாதார கட்டுபாடு காரணமாக பொட்டாசியம் குளோரைடு இறக்குமதி தடை செய்யப்பட்டது, தீப்பெட்டி தொழில் பாதிப்பு அடைந்த போது தமிழக அரசு துரிதமாக செயல்பட்டு சென்னை பெட்ரோ கெமிக்கல் மூலம் மொத்தமாக கொள்முதல் செய்து தீப்பெட்டி தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த பிரச்சினைகள் குறித்து சட்டமன்ற கேள்வி நேரத்தின் போதும், முன்னாள் அமைச்சர் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் ராஜு கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதும் பலமுறை பதில் அளித்துள்ளேன். 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலத்தால் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்வதையே வாடிக்கையாக கொண்ட எதிர்கட்சி தலைவருக்கு கழக அரசின் நடவடிக்கை எல்லாம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.



உலகம் அறிந்த கோவில்பட்டி கடலை மிட்டாய், உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று முதல்அமைச்சர் கடந்த ஆண்டு பிப்ரவரி 24ஆம் தேதி கோவில்பட்டி பகுதியில் கடலை மிட்டாய் குறுங்குழுமம் அமைக்கப்படும் என அறிவித்தார். அதன்படி ரூ.6.42 கோடி அரசு மானியத்துடன், ரூ.7.13 கோடி மதிப்பீட்டில், கடலை மிட்டாய் உற்பத்திக்கான பொது வசதி மையம் அமைக்க, சமூக நல மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாத்திற்குள் இத்திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் ஒவ்வொரு திட்டமும் கடைகோடி மக்களுக்கு சென்றடையும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

MSME துறைக்கு கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் ரூ. 3 ஆயிரத்து 617 கோடியே 62 லட்சம் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் கழக அரசு பொறுப்பேற்ற பின் முதல்அமைச்சர், இந்த 5 ஆண்டுகளில் மட்டும், ரூ. 6 ஆயிரத்து 626 கோடி நிதி ஒதுக்கி 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை விட 2 மடங்கு நிதி வழங்கி MSME துறையை தூக்கி நிறுத்திய பெருமை நம் முதல்அமைச்சருக்கு உண்டு. ஆட்சி பொறுப்பேற்று 4 ஆண்டு காலத்தில் 5 சுய வேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ். 2 ஆயிரத்து 57 கோடியே 90 லட்சம் மானியம் வழங்கப்பட்டு. 5 ஆயிரத்து 301 கோடியே 63 லட்சம் வங்கி கடனுதவி வழங்கி 63 ஆயிரத்து 14 புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் எதிர் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசி வருகிறார்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நிலங்களை பறிப்பதன் மூலம் இன்னும் எத்தனைப் பேரின் உயிரை திமுக அரசு பறிக்கப் போகிறது அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஆக. 4

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம் செங்காத்தகுளம் பகுதியில் முப்போகம் விளையும் விவசாய நிலங்களை அறிவுசார் நகரம் அமைப்பதற்காக கையகப்படுத்தும் திமுக அரசைக் கண்டித்து பா.ம.க. சார்பில் நேற்று முன்நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் என்னுடன் கலந்து கொண்ட மேல்மாளிகைப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த தனபாக்கியம் என்ற பெண்மணி உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து பெரும் வேதனை அடைந்தேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவுசார்நகரம்அமைப்பதற்காக கையகப்படுத்தப்படவுள்ள நிலங்களைப் பார்ப்பதற்காக நான் சென்றிருந்த போது, தனபாக்கியம் என்னை சந்தித்து முறையிட்டார். அப்போதே அவர் கலங்கிய மன நிலையில் தான் இருந்தார். அவருக்கு சொந்தமாக 3 ஏக்கர் நிலம் மட்டுமே இருப்பதாகவும், அதையும் அடிமாட்டு விலைக்கு அரசு பறித்துக் கொண்டால் தமக்கு வாழ்வாதாரமே இருக்காது என்று கலங்கினார். அவருக்கு ஆறுதல் கூறிய நான், உங்களின் நிலம் கையகப்படுத்தப்படாமல் பாதுகாப்பேன் என்று உறுதியளித்தேன்.



அதைத் தொடர்ந்து போராட்டத்தில் கலந்து கொண்டு ஆவேசமாக பேசினார். அதன் பின் வீட்டில் மாரடைப்பால் அவர் உயிரிழந்ததாகக் கூறப்படுவதை நம்ப முடியவில்லை. நிலம் பறி போய்விடும் என்ற அழுத்தமும், மன உளைச்சலும் தான் அவரது உயிரிழப்புக்கு காரணம் ஆகும். அப்பாவி மக்களின் நிலங்களை பறிப்பதன் மூலம் இன்னும் எத்தனைப் பேரின் உயிரை திமுக அரசு பறிக்கப் போகிறது என்று தெரியவில்லை.

விவசாயிகளின் வாழ்வாதாரமாக திகழும் நிலங்களை பறிக்கும் போக்கை தமிழக அரசு கைவிட வேண்டும். விளைநிலங்கள் எதற்காகவும் கையகப்படுத்தப்படாது என்று தமிழக அரசு அறிவிக்க வேண்டும். உயிரிழந்த தனபாக்கியம் குடும்பத்திற்கு தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவகங்கையில் தி.மு.க. நிர்வாகியை கொன்றவரின் தந்தை வெட்டிக்கொலை; பழிக்குப்பழியா? போலீஸ் விசாரணை

சிவகங்கை, ஆக. 4

சிவகங்கை மாவட்டம் சாமியார்பட்டியைச் சேர்ந்த கருப்பையா. ஆடு மேய்க்கும் தொழில் செய்து வந்த கருப்பையாவை இன்று மர்ம நபர்கள் சிலர் வெட்டி படுகொலை செய்துள்ளனர். இது குறித்து தகவலறிந்து வந்த போலீசார், கருப்பையாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

முன்னதாக கருப்பையாவின் மகன் விக்கி என்ற கருணாகரன், தி.மு.க. நிர்வாகி பிரவீன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், பழிக்குப்பழியாக இந்த கொலை நடந்துள்ளதா? என்ற கோணத்தில் போலீசார் தீவிரவிசாரணைநடத்தி வருகின்றனர்.



# நெல்லை ஆணவக்கொலை வழக்கு; காவல்துறை வழங்கிய ஆவணங்களை சரிபார்க்கும் பணி தீவிரம்

நெல்லை, ஆக. 4

நெல்லை பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் பகுதியை சேர்ந்தவர் சரவணன். இவரது மனைவி கிருஷ்ணகுமாரி. இந்த தம்பதிக்கு சுர்ஜித் (வயது 24) என்ற மகனும், சுபாஷினி என்ற மகளும் உள்ளனர். சரவணனும், கிருஷ்ணகுமாரியும் மணிமுத்தாறு பட்டாலியன் போலீசில் சப்இன்ஸ்பெக்டர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இதற்கு முன் சரவணனின் குடும்பத்தினர் தூத்துக்குடியில் வசித்து வந்த போது, அவரது மகள் படித்த பள்ளிக்கூடத்தில் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரசேகர் மகன் கவின்குமார் (வயது 26) படித்துள்ளார். அப்போது, கவின்குமாருக்கும், சுபாஷினிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு இருவரும் காதலித்து வந்தனர். பள்ளி, கல்லூரி படிப்பை முடித்த கவின்குமார் சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.



இந்நிலையில், கடந்த 27ந்தேதி கவின்குமாரின் தாத்தாவுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. எனவே, கவின்குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் தாத்தாவை அழைத்துக் கொண்டு பாளையங்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றனர். இதனை அறிந்து அங்கு சென்ற சுபாஷினியின் தம்பி சுர்ஜித், மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த கவினை தனியாக அழைத்துச்சென்று, தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் கவின்குமாரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி ஓடினார். இதில் படுகாயம் அடைந்த கவின்குமார் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடி துடித்து உயிரிழந்தார்.

தமிழகத்தையே உலுக்கிய இந்த ஆணவக் கொலை சம்பவம் தொடர்பாக சுர்ஜித் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து அவரது தந்தை சரவணனையும் போலீசார் கைது செய்தனர். இதனிடையே, இந்த வழக்கின் விசாரணை கடந்த 30ந்தேதி சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டது. இதையடுத்து, கொலை வழக்கு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

மாநகரகாவல் துறை அதிகாரிகளிடம் பெறப்பட்ட ஆவணங்களை சரிபார்க்கும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மாநகரகாவல் துறையின் விசாரணை அதிகாரி சுரேஷ், சி.பி.சி.ஐ.டி. காவல் நிலையத்தில் ஆவணங்கள் தொடர்பாக விளக்கமளித்தார். மேலும், கொலை நடந்த இடத்தில் கைப்பற்றப்பட்ட சி.சி.டி.வி. பதிவுகள் உள்ளிட்டவைகளையும் சி.பி.சி.ஐ.டி. போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த வழக்கின் விசாரணைக்காக 4 குழுக்கள் அமைக்கப்பட்டு கவின் கொலை செய்யப்பட்ட இடம் மற்றும் வழக்கிற்கு தொடர்புடைய இடங்களில் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# முதல்அமைச்சருடனான ஓ.பன்னீர்செல்வம், பிரேமலதா சந்திப்பு குறித்து அமைச்சர் துரைமுருகன் பேட்டி

வேலூர், ஆக. 4

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த வள்ளிமலை பகுதியில் நடைபெற்ற நலன் காக்கும் ஸ்டாலின் திட்டம் தொடக்க விழாவில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கலந்துகொண்டு சிறப்பு திட்ட முகாமை தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த விவரம்:

பிரேமலதா. ஓ.பன்னீர்செல்வம் முதல் அமைச்சரை சந்தித்தனர். இது கூட்டணியாக மாற வாய்ப்பு உள்ளதா? இதன் பின்னணி ஏதேனும் உள்ளதா?

பின்னணியும் இல்லை முன்னணியும் இல்லை தலைவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அரசியல் பண்பாட்டுடன் வந்து பார்த்தார்கள் அவ்வளவுதான்.

பீகாரை சேர்ந்த 6.5 லட்சம் பேர் தமிழகத்தில் வாக்காளர்களாக சேர்க்கவாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளதே?

அவர்களுக்கு எல்லாம் அவர்கள் ஊரிலேயே வேலை ஏற்படுத்திக் கொடுத்திருந்தால் நம்ம ஊருக்கு வந்திருக்க மாட்டார்கள்.



இங்க வந்திருக்கிறார்கள் இப்போது என்ன செய்வது என்பது மிகப்பெரிய பிரச்சினை. பீகாரில் ஏனென்றால் உயிரோடு இருப்பவர்களை எல்லாம் இல்லை என போட்டு விட்டார்கள். அந்த மாதிரி நம் ஊரில் போட முடியாது. இதை தலைவர்கள் தான் அணுக வேண்டும். வெளி மாநிலத்தை சேர்ந்தவர்கள் லட்சக்கணக்கில் தமிழகத்தில் வாக்காளர்களாக மாறும்போது வரும் காலத்தில் தமிழகத்தில் நிச்சயம் அரசியலில் பாதிப்பும் தாக்கமும் இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக அவர் மேடையில் அமைச்சர் துரைமுருகன் பேசுகையில், மக்களுக்காக தொடர்ந்து பல்வேறு முகாம்களை முதல்வர் நடத்தி வருகிறார். இப்போதும் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்று வருகிறது. அது முடிவதற்குள்ளேயே இன்னொரு மக்கள் நலன் சார்ந்த முகாமை முதல்அமைச்சர் தொடங்கி உள்ளார். என்னால் இப்போதைக்கு அதிகமாக பேச முடியாது ஏனென்றால் எனக்கு சற்று உடல் நலம் சரியில்லை என பேசினார்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
4.8.2025

# டிஐஜி வருண்குமார் தொடர்ந்த வழக்கு: சீமானுக்கு இடைக்கால தடை



சென்னை, ஆக. 4

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரி வருண்குமார் ஆகியோர் இடையே அண்மை காலத்தில் கருத்து மோதல்கள் இருந்து வருகிறது. இருவரும் பரஸ்பரம் மாறி மாறி கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தனக்கு எதிராக பொது வெளியில் சீமான் ஆதாரம் இல்லாமல் அவதூறு கருத்துகளை தெரிவிப்பதால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் தனக்கு எதிரான அவதூறான, ஆதாரமில்லாத கருத்துக்களை தெரிவிக்க சீமானுக்கு தடை விதிக்கக் கோரி, ஐ.பி.எஸ். அதிகாரி வருண்குமார் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், சீமான் தனக்கு இரண்டு கோடியே பத்து லட்சம் ரூபாய் மான நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் கோரியிருந்தார். இந்த வழக்கை எண்ணிட அனுமதிக்க கோரிய மனு, நீதிபதி கே.குமரேஷ் பாபு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, சீமான் தரப்பில் வழக்கறிஞர் சங்கர் ஆஜராகி, வழக்கு எண்ணிடும் நிலையில் உள்ளது.

பதிலளிக்க அவகாசம் வழங்காமல் தற்போது எந்த இடைக்கால உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது எனவும், ஏற்கனவே, மதுரை அமர்வில் அவதூறு வழக்கு நிலுவையில் உள்ளது எனவும் தெரிவித்தார். இதை ஏற்க மறுத்த நீதிபதி, திருச்சி சரக டி.ஐ.ஜி., வருண்குமாருக்கு எதிராக, சீமான் பேச இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

மேலும் மனுவிற்கு பதில் அளிக்க சீமானுக்கு உத்தரவிட்டு, விசாரணையை அடுத்த வாரம் தள்ளி வைத்தார்.

# கூலி இசை வெளியீட்டு விழா: போலீசாருடன் ரசிகர்கள் வாக்குவாதம்



சென்னை, ஆக. 4

கூலி இசை வெளியீட்டு விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்று வருகிறது. இந்த இசை வெளியீட்டு விழாவில் பங்கேற்க ரசிகர்கள் பலருக்கும் அனுமதி பாஸ் வழங்கப்பட்டு உள்ளது. அரங்கத்திற்குள் ரசிகர்கள் இசை வெளியீட்டு விழாவை ரசித்து வரும் நிலையில், ஏராளமான ரசிகர்கள் தங்களுக்கு அனுமதி அளிக்கப்படாததால், அரங்கத்திற்கு வெளியே காத்திருக்கிறார்கள். அரங்கம் நிறைந்துவிட்டது உள்ளே அனுமதிக்க முடியாது என்று போலீசார் கூறியதால், ரசிகர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையும் காண முடிந்தது. இதனால் அங்கு பரபரப்பான சூழல் காணப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் (4.8.2025)

**மேஷம்:** இன்று பணியிடம் தொடர்பான நல்ல செய்தி உங்களைச் சேரும். பயணங்கள் சாதகமாக அமைந்து மனநிம்மதி தரும்.

**ரிஷபம்:** உழைப்பிற்கு உகந்த பலன் கிடைக்கும் நாள். நிதி தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்க நம்பிக்கையுடன் முன்னேறுங்கள்.

**மிதுனம்:** உடல்நலம் குறித்த கவனிப்பு தேவைப்படும் நாள். கருத்து வேறுபாடுகள் நெருக்கத்தை பாதிக்கலாம், நிதானம் அவசியம்.

**கடகம்:** புதிய வாய்ப்புகள் கைகொடுக்கும் நாள். நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்த செயல் இன்று தொடங்கலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி சூழ்நிலை ஏற்படும். பழைய நண்பர்கள் தொடர்பு கொண்டு உதவி அளிக்கக் கூடும்.

**கன்னி:** தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் சூழ்நிலை உருவாகும். வீண் செலவுகள் வர வாய்ப்பு உள்ளதால் கட்டுப்பாடாக இருங்கள்.

**துலாம்:** புதுமை தேடும் முயற்சிகள் வெற்றி பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** பணியில் இருந்து எதிர்பாராத ஆதரவு கிடைக்கும். பழைய பிரச்சனைகள் குறைவடையும்.

**தனுசு:** வெளிநாட்டு தொடர்புகளில் குழப்பங்கள் ஏற்படலாம். தாமதம் இருந்தாலும் வெற்றி நிச்சயம்.

**மகரம்:** சாதனை புரிவதற்கான நேரம் இது. உங்கள் முயற்சி பாராட்டபடும் நாள். பண வரவை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** பழைய கடனை அடைக்க வசதி ஏற்படும். சகோதர உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும்.

**மீனம்:** திடீர் செலவுகள் வரலாம். மனக்கவலை விட மகிழ்வுடன் செயல்படுங்கள், வெற்றி உங்களுக்கே..

# நெல்லை ஆணவக்கொலை வழக்கு; கைதான சுர்ஜித்துக்கு மேலும் 14 நாட்கள் நீதிமன்றக் காவல்



நெல்லை, ஆக. 4

நெல்லை பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் பகுதியை சேர்ந்தவர் சரவணன். இவரது மனைவி கிருஷ்ணகுமாரி. இந்த தம்பதிக்கு சுர்ஜித் (வயது 24) என்ற மகனும், சுபாஷினி என்ற மகளும் உள்ளனர். சரவணனும், கிருஷ்ணகுமாரியும் மணிமுத்தாறு பட்டாலியன் போலீசில் சப்இன்ஸ்பெக்டர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இதற்கு முன் சரவணனின் குடும்பத்தினர் தூத்துக்குடியில் வசித்து வந்தபோது, அவரது மகள் படித்த பள்ளிக்கூடத்தில் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரசேகர் மகன் கவின்குமார் (வயது 26) படித்துள்ளார். அப்போது, கவின்குமாருக்கும், சுபாஷினிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு இருவரும் காதலித்து வந்தனர். பள்ளி, கல்லூரி படிப்பை முடித்த கவின்குமார் சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், கடந்த 27 ந்தேதி தனது தாத்தாவின் சிகிச்சைக்காக நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள மருத்துவமனைக்கு கவின்குமார் வந்திருந்தார். இதனை அறிந்து அங்கு சென்ற சுபாஷினியின் தம்பி சுர்ஜித், மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த கவினை தனியாக அழைத்துச் சென்று, தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் கவின்குமாரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பிஓடினார். இதில் படுகாயம் அடைந்த கவின்குமார் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தார்.

தமிழகத்தையே உலுக்கிய இந்த ஆணவக்கொலை சம்பவம் தொடர்பாக சுர்ஜித் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து அவரது தந்தை சரவணனையும் போலீசார் கைது செய்தனர். இதனிடையே, இந்த வழக்கின் விசாரணை கடந்த 30ந்தேதி சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டது. இதையடுத்து, கொலை வழக்கு தொடர்பாக காவல்துறையால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் கடந்த 28 ந்தேதி கைது செய்யப்பட்ட சுர்ஜித், நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட காவல் இன்றோடு முடிவடைந்த நிலையில், போலீசார் சுர்ஜித்தை இன்று கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். இதையடுத்து சுர்ஜித்துக்கு மேலும் 14 நாட்கள் நீதிமன்ற காவலை நீட்டித்து நெல்லை மாவட்ட வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சென்னையில் 70 பூங்காக்களில் புத்தகம் வாசிப்பதற்கான நூலகம் அமைக்க மாநகராட்சி திட்டம்




சென்னை, ஆக. 4

பொதுமக்களிடையே வாசிப்பு திறனை ஊக்குவிக்கவும் மேம்படுத்தும் விதமாகவும் பூங்காக்களில் சிறிய நூலகம் அமைக்க மாநகராட்சி அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். முதல்கட்டமாக ராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட சென்னை சூளை ஏ.பி.சாலையில் உள்ள ராகவேந்திரா பூங்கா மற்றும் சிந்தாரிப்பேட்டையில் உள்ள மே தின பூங்காவில் சிறிய நூலகம் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டு உள்ளது.

இதற்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்து வரும் நிலையில், இந்த திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் சென்னையில் உள்ள 70 பூங்காக்களில் புத்தகம் வாசிப்பதற்கான நூலகம் அமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் ஒரு அதிர்ச்சி சம்பவம்: தாய்ப்பால் குடித்துவிட்டு தூங்கிய பச்சிளம் குழந்தை உயிரிழப்பு



சென்னை, ஆக. 4

சென்னை பட்டினப்பாக்கம் சீனிவாசப்புரத்தை சேர்ந்தவர் விக்னேஷ் (வயது 28). எலக்ட்ரீசியனான இவரது மனைவி சங்கீதா. இவர்களுக்கு 2 வயதில் ஆண் குழந்தை உள்ளது. கடந்த மாதம் 28 ந்தேதி சங்கீதாவுக்கு பெண் குழந்தை ஒன்று அறுவை சிகிச்சை மூலம் பிறந்தது.

சங்கீதா நேற்று அதிகாலை 3 மணியளவில் குழந்தைக்கு பாலூட்டிவிட்டு தூங்கவைத்துள்ளார். பின்னர் 2 மணி நேரம் கழித்து குழந்தை எந்தவித அசைவும் இன்றி இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனே விக்னேசும், சங்கீதாவும் குழந்தையை சென்னை கஸ்தூரிபா காந்தி ஆரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு குழந்தையை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து பட்டினப்பாக்கம் போலீசார் விசாரித்து வருகிறார்கள். பிறந்து 6 நாட்களே ஆன பச்சிளம் குழந்தை உயிரிழந்தது குடும்பத்தினரிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மருத்துவ அதிகாரி ஒருவர் கூறும்போது, "குழந்தை தாய்ப்பால் குடித்தபிறகு, ஏப்பம் விடுவதற்காகவும் செரிமானம் ஆவதற்காகவும் சிறிதுநேரம் கழித்து குழந்தையின் முதுகை லேசாக தடவலாம். இது குழந்தை ஏப்பம்விட உதவிகரமாக இருப்பதோடு, பால் வாந்தியெடுப்பதையும் தடுக்கும். இதன்மூலம் கவனகுறைவால் குழந்தைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரிப்பதை தடுக்கலாம்" என்றார்.

இதேபோன்ற சம்பவம் கடந்த மாதம் சைதாப்பேட்டையில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீராம் கார்த்திக் நடிக்கும் "மெஸன்ஜர்" படத்தின் "போனதூரம் போதுமாடி " பாடல் வெளியீடு




கன்னிமாடம் உட்பட சில படங்களில் நடித்துள்ள ஸ்ரீராம் கார்த்திக், அடுத்து நடித்துள்ள படம், 'மெஸன்ஜர்'. பி.வி.கே பிலிம் பேக்டரி சார்பில் பா.விஜயன் தயாரித்துள்ள இந்தப் படத்தில் மனீஷா ஜஸ்னானி, பாத்திமா நஹீம், வைசாலி ரவிச்சந்திரன், லிவிங்ஸ்டன், பிரியதர்ஷினி ராஜ்குமார், ஜீவா ரவி உட்பட பலர் நடித்துள்ளனர். கதை, திரைக்கதை எழுதி இயக்கி இருக்கிறார் ரமேஷ் இலங்காமணி. இந்த திரைப்படத்திற்கு எம். அபூபக்கர் இசையமைத்திருக்கிறார்.

ஐடி கம்பெனியில் பணியாற்றும் ஸ்ரீராம் கார்த்திக், தற்கொலைக்கு முயற்சிக்கிறார். அவரது முகநூல் மெஸன்ஜரில் ஒரு பெண் தகவல் அனுப்பி அதை தடுக்கிறார். அவளுக்கு எப்படி, தான் தற்கொலை செய்ய போவது தெரியும்? அந்தப் பெண் யார்? என்பது கதை. பேன்டஸி காதல் கதையாக இது உருவாகியுள்ளது. பால கணேசன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு அபு பக்கர் இசையமைத்துள்ளார். வெளியீட்டுக்குத் தயாராக உள்ள இந்தப் படத்தின் முதல் தோற்ற போஸ்டர் சமீபத்தில் வெளியானது. விக்ரவாண்டி அதன் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் சென்னையில் இதன் படப்பிடிப்பு நடைபெற்றுள்ளது.

இப்படத்தில் இடம் பெற்ற 'வானமே இல்லா பறவையாய்..' எனத் தொடங்கும் பாடலை தர்சன் எழுத, பின்னணி பாடகர் கபில் கபிலன் பாடியிருக்கிறார். இப்படத்தின் 'ஒன் சைடா வளர்த்தேன்' என்ற பாடலை பாடகி சைந்தவி பாடியுள்ளார்.

இந்நிலையில் இப்படத்தின் 'போனதூரம் போதுமாடி' பாடல் வெளியாகியுள்ளது. இப்பாடலை பிரசாந்த் எழுத, பின்னணி பாடகர் சத்ய பிரகாஷ் பாடியிருக்கிறார்.

# 2வது தேசிய விருது வென்றுள்ள ஜி.வி.பிரகாஷ்க்கு தனுஷ் வாழ்த்து




2023ம் ஆண்டில் வெளியான திரைப்படங்களுக்கான தேசிய விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டது. இவற்றில் 'வாத்தி' திரைப்படத்திற்கு சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதை வென்றுள்ளார் ஜி.வி.பிரகாஷ் குமார். 2வது முறையாக தேசிய விருது பெறும் ஜி.வி.பிரகாஷ், தனக்கு கிடைத்த விருதுக்காக நன்றி. ரொம்ப சந்தோஷமாக உள்ளது. நான் எதிர்பாக்கவே இல்ல..சர்ப்ரைஸ் ஆகிட்டேன் என்று கூறியுள்ளார்.

'சூரரைப் போற்று' படத்துக்காக சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது ஏற்கெனவே ஜி.வி.பிரகாஷுக்கு வழங்கப்பட்ட நிலையில், தற்போது கடந்த 2023ம் ஆண்டு வெளியான தனுஷின் 'வாத்தி' படத்துக்காக மீண்டும் இரண்டாவது முறையாக அவருக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் எக்ஸ் தள பதிவில், "இரண்டாவது முறையாக சிறந்த இசையமைப்பாளருக்கான விருதைப் பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வாத்தி படத்துக்காக என்னைத் தேர்ந்தெடுத்த சகோதரர் தனுஷுக்கு எனது மனமார்ந்த நன்றி. பொல்லாதவன் முதல் அசுரன், வாத்தி, இட்லி கடை வரையில் எங்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு, எங்கள் இருவருக்கும் ஆக்கப்பூர்வமாக பலனளித்து வருகிறது." என பதிவிட்டிருந்தார்..

இந்நிலையில் 2வது தேசிய விருது வென்றுள்ள ஜி.வி.பிரகாஷ்க்கு தனுஷ் வாழ்த்து கூறியுள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் தள பதிவில், "வாத்தி படத்திற்காக தனது 2வது தேசிய விருதை வென்றுள்ள சகோதரர் ஜி.வி. பிரகாஷ்க்கு வாழ்த்துகள். தனிப்பட்ட முறையில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. உங்களது சிறப்பான படைப்பு இனிமேல்தான் வரப்போகிறது என எனக்குத் தெரியும். அடுத்தடுத்து நாம் இணையப்போகும் படங்களுக்கு காத்திருக்கிறேன்" என பதிவிட்டுள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் சகோதரி மகனான சிறுவன் ஜி.வி.பிரகாஷ் 'ஜென்டில்மேன்' படத்தில் இடம்பெற்ற 'சிக்குபுக்கு ரயிலே' பாடல் மூலம் அறிமுகமானார். வசந்தபாலனின் 'வெயில்' படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானார். 'கிரீடம்', 'பொல்லாதவன்', 'காளை', 'ஆனந்த தாண்டவம்', 'அங்காடி தெரு' என தமிழ் ரசிகர்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை தேடிப் பிடித்துக் கொண்டார் ஜி.வி. 'மதராசப்பட்டினம்' படத்தின் பாடல்கள் பெற்ற வரவேற்பு ஜி.வி.பிரகாஷை மேலும் உயரம் செல்ல உதவியது. வெற்றிமாறனின் 'ஆடுகளம்' படம் அவருக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான பிலிம்பேர் விருதை பெற்று தந்தது.

# மக்காவ் ஓபன் பேட்மிண்டன்: லக்சயா சென் அரையிறுதியில் தோல்வி



மக்காவ் ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி மக்காவ் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீரர் தருண், 45ம் நிலை வீரரான மலேசியாவின் ஜஸ்டின் ஹோக்கை சந்தித்தார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டை கைப்பற்றிய தருண், அதன் பிறகு இழைத்த தவறு காரணமாக சறுக்கலை சந்தித்தார். முடிவில் தருண் 2119, 1621, 1621 என்ற செட் கணக்கில் ஜஸ்டினிடம் போராடி வீழ்ந்தார். இந்த ஆட்டம் 1 மணி 21 நிமிடம் நீடித்தது.

மற்றொரு அரையிறுதியில் காமன்வெல்த் விளையாட்டு சாம்பியனும், தரவரிசையில் 17வது இடம் வகிப்பவருமான இந்திய இளம் வீரர் லக்‌ஷயா சென் 1621, 921 என்ற நேர்செட்டில் 39 நிமிடங்களில் தரநிலையில் 25வது இடத்தில் உள்ள இந்தோனேசியாவின் ஆல்வி பர்ஹானிடம் தோற்று வெளியேறினார். இதன் மூலம் இந்த போட்டியில் இந்தியாவின் சவால் முடிவுக்கு வந்தது.

# ஆசிய கோப்பை போட்டி இடம் அறிவிப்பு: துபாயில் இந்தியாபாகிஸ்தான் மோதல்




நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உள்பட 8 அணிகள் பங்கேற்கும் 17வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) அடுத்த மாதம் (செப்டம்பர்) 9ந் தேதி முதல் 28ந் தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த போட்டி ஆட்டவணை ஏற்கனவே வெளியிடப்பட்டு இருந்தாலும் போட்டி அரங்கேறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் இந்த போட்டித்தொடர் துபாய் மற்றும் அபுதாபியில் நடைபெறும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ள இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை செப்.10ந் தேதி துபாயில் சந்திக்கிறது. இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்.14ந் தேதி துபாயிலும், ஓமனை செப்.19ந் தேதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி செப்.28ந் தேதி துபாயில் அரங்கேறுகிறது.

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்: ரவீந்திர ஜடேஜா புதிய சாதனை

இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதும் 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 224 ரன்களில் சுருண்டது.இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 247 ரன்கள் எடுத்தது. இது இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோரை விட 23 ரன்கள் கூடுதலாகும்.

23 ரன்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய இந்தியா, இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 75 ரன்கள் எடுத்திருந்தது. ஜெய்ஸ்வால் 51 ரன்களும், ஆகாஷ் தீப் 4 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். கே.எல். ராகுல் 7 ரன்களிலும், சாய் சுதர்சன் 11 ரன்களிலும் பெவிலியன் திரும்பினர்.

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் தொடங்கியதும், விரைவாக விக்கெட்டுகளை வீழ்த்தலாம் என்ற இங்கிலாந்து அணியின் திட்டத்திற்கு ஆகாஷ் தீப் , ஜெய்ஸ்வால் முட்டுக்கட்டைபோட்டனர். ஆகாஷ் தீப் சிறப்பாக விளையாடி அரைசதமடித்தார் . அவர் 66 ரன்களில் ஆட்டமிழந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெய்ஸ்வால் சதம் விளாசினார். தொடர்ந்து விளையாடிய ஜெய்ஸ்வால் 118 ரன்களில் ஆட்டமிழந்தார் . பின்னர் வந்த துருவ் ஜுரேல் 34 ரன்களில் வெளியேறினார். தொடர்ந்து ஜடேஜா , வாஷிங்டன் சுந்தர் இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் நிலைத்து ஆடிய ஜடேஜா அரைசதமடித்து அசத்தினார் . மறுபுறம் வாஷிங்டன் சுந்தர் அதிரடியாக விளையாடினார் . பந்துகளை பவுண்டரி , சிக்சருக்கு பறக்க விட்ட அவர் அரைசதமடித்தார். பின்னர் ஜடேஜா 53 ரன்களிலும் , வாஷிங்டன் சுந்தர் 53 ரன்களிலும் ஆட்டமிழந்தனர் . இறுதியில் இந்திய அணி 2வது இன்னிங்சில் 396 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால் இங்கிலாந்து அணிக்கு 374 ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து 374ரன்கள் இலக்குடன் இங்கிலாந்து அணி 2வது இன்னிங்சில் விளையாடியது தொடக்கம் முதல் பென் டக்கெட் , ஜாக் கிராலி இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் . தொடக்க விக்கெட்டுக்கு 50 ரன்கள் சேர்த்த நிலையில் ஜாக் கிராலி 14 ன்களுக்கு முகமது சிராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.இறுதியில் 3வது நாள் முடிவில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 50 ரன்கள் எடுத்தது . இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு இன்னும் 324 ரன்கள் தேவைப்படுகிறது . இந்த நிலையில்,இந்த போட்டியில் அரைசதம் அடித்ததால் ஜடேஜா புதிய சாதனை படைத்துள்ளார். இந்த தொடரில் ரவீந்திர ஜடேஜா ஒரு சதம், 5 அரைசதம் உள்பட 516 ரன்கள் எடுத்துள்ளார். 6 மற்றும் அதற்கு கீழ் வரிசையில் களம் இறங்கி ஒரு தொடரில் 500 ரன்னுக்கு மேல் எடுத்த முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றார். இங்கிலாந்து மண்ணில் ஒரு தொடரில் அதிக முறை (6 தடவை) 50 ரன்னுக்கு மேல் எடுத்த இந்தியர் என்ற மகத்தான சாதனையை ரவீந்திர ஜடேஜா சொந்தமாக்கினார். இதற்கு முன்பு சுனில் கவாஸ்கர், விராட் கோலி, ரிஷப் பண்ட் ஆகியோர் தலா 5 முறை 50 ரன்னுக்கு மேல் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.